**செய்தி வெளியீடு எண்: 47/2022** **நாள்: 22.06.2022**

## பத்திரிக்கை செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்களில் இலவச முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மருத்துவப் பயிற்சிக்கான TACT அகாடமியுடன் இணைந்து மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக CPR (Cardiopulmonary resuscitation) போன்ற உயிர்காக்கும் முதலுதவி வழங்கும் இலவச விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களில் நடத்துகிறது.

| தேதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 25.06.2022 (சனிக்கிழமை) | விம்கோ நகர் மெட்ரோ | காலை 10 மணி முதல் 11 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை |
| 26.06.2022 (ஞாயிற்றுக்கிழமை) | அசோக் நகர் மெட்ரோ | |

மேற்கூறிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்குப்பெற விருப்பம் உள்ளவர்கள், பதிவு செய்ய மற்றும் கூடுதல் விவரங்களுக்கு கீழே உள்ள இணைப்புகளை கிளிக் செய்யவும்;

- 25.06.2022 - https://tact-india.com/registration/
- 26.06.2022 - https://tact-india.com/registration-form2/

இந்த CPR விழிப்புணர்வின் ஒவ்வொரு அமர்விலும் 25 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் தங்கள் இலவச CPR அமர்வை முன்பதிவு செய்ய மேலே குறிப்பிட்டுள்ள இணைப்புகளில் பதிவு செய்யலாம்.

மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**